


# இறையருள்
# IRAIARUL

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY

Volume 19 No : 4 April 2015



## Editorial Board

*Patron*
His Excellency
**Mar George Rajendran SDB**

*Chief Editor*
**Fr. Joseph Santhosh**

*Executive Editor*
**Mr. Soundara Raj**

*Associate Editors*
**Fr. K.J. Antony SDB**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**



Published by
**Fr. Joseph Santhosh**
Bishop's House
Post Box No . 12
Thuckalay - 629 175
K.K.Dist,Tamil Nadu,India.

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay.**
Ph:04651-252570


## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 2 |
| திருத்தந்தையிடமிருந்து... | 7 |
| நற்செய்தி நிலையம் | 9 |
| Grace.com | 14 |
| தவக்கால தியானம் | 15 |
| இல்வாழ்வு இயக்கம் | 16 |
| Home mission | 18 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 19 |
| சிறப்புப்பள்ளிகள் | 20 |
| திருத்தொண்டுப் பணிக்குழு | 23 |
| Birthdays & Feastdays | 24 |
| இறைமடியில்.. | 25 |
| விழுதுகள்-6 | 27 |
| காரோடு மலை | 29 |
| இதரச் செய்திகள் | 30 |
| Bishop's Engagements | 32 |




## BISHOP'S MESSAGE

Dear and Rev. Fathers,

*A Very Happy Easter and Blessings of the Risen Lord!*

Jesus is risen from the dead! This is the truth we celebrate during Easter because, we believe in it. We are actually celebrating the crux of our faith. As St. Paul teaches us, "if Christ has not been raised, our preaching is useless and so is your faith" (1 Cor 15:14).

We are celebrating the resurrection of Christ. It is a miracle. But it is not simply a miracle that is alien to our existence, something that probably happened to someone two thousand years ago.

**Christ – Our Hope of Rising from the Dead**

We are personally bound to the Risen Christ. As Pope Francis says, "our faith in the resurrection is bound to the person of Jesus Christ, who himself said "I am the resurrection and the life."[1] This personal bonding with Christ basically should be the reason why we celebrate Easter. We usually celebrate something that personally gives us joy and fulfilment of our own existence and that which gives us sense of purpose.

The noted writer Hilaire Belloc tells us, "We wander for distraction, but we travel for fulfilment." We spoke of Lenten Journey, and differentiated it from wandering in the wilderness. What Christ achieves for us in resurrection is the attainment of the journey of Lent, and the end of our journey of life. *If life becomes a mere wandering, its destiny is merely death.* Life then will give us no joy. Life becomes a hopeless endeavour. It has no purpose, and never can one ever think of a life of love.

*If Christ is risen, we too who have died with him will rise.* St. Paul affirms, "we were therefore buried with him through baptism into death in order that, just as Christ was raised from the dead through the glory of the Father, we too may live a new life" (Rom 6:4).

**Christ – the One who suffers in Syria, Iraq, Libya, Nigeria or**

Today we are witnesses to Christians, our brothers and sisters, who are being persecuted for their faith in Christ. We see the imprint of early Christian martyrs in them. Pope Francis calls them saints.

The early Christians celebrated their new life in Christ. Their celebrating life included joyful proclamation and witness. They proclaimed which they had seen with their eyes, which they had looked at and which their hands had touched (cf. 1Jn 1:1).

Saul, before he became Paul could not bear to see 'untrue' things being proclaimed. He had not seen, nor touched, nor experienced the Truth of Jesus Christ. But Christ touched him. Christ made him new. Once Paul was converted, his whole desire was "to know Christ—[...], to know the power of his resurrection and participation in his sufferings, becoming like him in his death" (Philip 3:10). Christ experience made him declare, "I have been crucified with Christ and I no longer live, but Christ lives in me" (Gal 2:20).

Experience of resurrection makes one, not just part of the body of Christ, but of Christ living in oneself. The early Christians experienced it; St. Paul experienced it. Those who suffer with Christ and those who suffer for Christ experience it. Today, there are those in different countries who undergo the experience of suffering and crucifixion, as did the early Christians, and as did Paul.

Today we are witnesses to numerous Christians who daringly lay down their lives having been gripped by the Risen Christ. We have heard of the massacre and torture of Christians in Syria, Iraq, Libya, Nigeria, India, and in other places. That day Christ asked Saul, "Saul, Saul why are you persecuting me (Acts 9:4). Today too, Christ continues to experience the suffering, death, and crucifixion, in the



members of His Body. So, we can continue to believe without losing hope that Christ asks that same question to our persecutors. In turn those persecutors and those who witness this persecution will come to believe in Christ our saviour. God turns evil into good. God turns evil intentioned people into his apostles.

Tertullian was inspired to say, "The blood of the martyrs is the seed of the church." Let no persecution make us discouraged or make us lose our faith. Resurrection gives us hope that no persecution, or suffering, or crucifixion can stand in the way of believing in Christ.

Let us as we celebrate this Easter, pray in a special way for our brothers and sisters, who are persecuted for their faith in Christ.

**SOME**

**1.Orientation**

An Orientation Program meant for all the priests of Marthandam and Thuckalay Dioceses was held at MIDS, Kazhuvanthittai on 16th and 17thMarch 2015. Rev. Fr. George Plathottam SDB, the CBCI Social Communication Secretary, animated the priests on the theme "Pastoral Perspectives on Communication".

**2.Sanctification**
**Dhas**

The priests and religious of the diocese gathered together on 31st March at Sangamam to thank God for the gift of Priesthood and religious life. I take this opportunity to thank from the core of my heart Most Rev. Jerome Dhas SDB, the Bishop of Kuzhithurai diocese who willingly agreed to preach the recollection.

**3.**

We congratulate Bro. Abhilash who had his Vestition on 30th March. We also congratulate Bro. Vinu and Bro.

Jabanesh who received their minor orders on the same day. We wish them well as they proceed with their formation towards priesthood.

**4.Rev.**

Rev. Fr. Jose Muttathupadam, our VG, made a visit of our seminarians studying at Ujjain and Satna between 4th & 12th March. The seminarians were very happy to receive Rev. Fr. Muttathupadam.

**5.Successful**

We profusely thank God for answering our prayers and for guiding us in getting the affiliation of our St. Alphonsa College of Arts and Science with the Manonmaniam Sundaranar University.

**SOME**

**1.**

I am happy to tell you that soon in the first week of Easter, we will have 7 of our deacons ordained. I exhort you to participate with brotherly concern in as many ordinations of our deacons as possible.

**2.**

We are grateful to the Lord for our brothers who will permanently commit themselves and enter into the ministerial order of Diaconate. Those admitted to diaconate for this year are, Bro. Anil Raj, Bro. Ajin Jose, Bro. Samuel, Bro. Rito Thoompunkal, and Bro. Justin Sudheesh. We congratulate these young men and pray for them.

**3.**

We will felicitate our New Priests and all of them will celebrate mass together for us on May 12$^{th}$ at Malaicode, at 5.30pm.

**4.New**

The Mission Region of the CMC sisters is now being raised to the status of a Vice-Province. It only shows the



commitment, fidelity, and involvement of all the sisters who have expanded God's mission through their charism. We congratulate the sisters and pray for them. The official function of the inauguration of the Vice-Province will be on 28$^{th}$ April.

**5.**

St. Alphonsa convent at Nagercoil will celebrate the Silver Jubilee of their house this year. They will hold their celebrations on April 27$^{th}$. We congratulate and wish them God's blessings and assure them of our prayers.

**6.**

On 24$^{th}$ April Mukkoottukal Parish will celebrate its Golden Jubilee.

**7.**

a.On 21$^{st}$ April at 2.30pm we will have the Interdepartmental meet at the Bishop's House.

b.Pastoral Council Agenda Committee meet will be held on 13$^{th}$ April at Padanthalummoodu at 5.00pm.

c.Priests Conference will be held on 13$^{th}$ April, Monday.

**In**

The celebration Easter tells the world that we are people filled with hope. Our hope is seen in the way we live our lives. A face which reflects the joy of the resurrection, our attitudes reflecting hope, our hearts filled with love, all these show that we are an Easter people. Resurrection begins when we die. Our resurrection does not need to wait for the day of our physical death. Christ calls us to die to ourselves. Resurrection then becomes a reality even in this life and can give us the foretaste of heaven.

Once again wish you all dear fathers a very Happy Easter!

Yours in the Risen Christ,

+

## திருத்தந்தையின் **URBI ET ORBI** வாழ்த்துச் செய்தி

பகைமையை அன்பு வென்றுள்ளது, சாவை வாழ்வு வெற்றி கண்டுள்ளது, இருளை ஒளி விரட்டியடித்துள்ளது. நம்மீது கொண்ட அன்பால் இயேசு தன்னையே வெறுமையாக்கி அடிமையின் கோலம் பூண்டு சிலுவைச் சாவை ஏற்றார். அதற்கு கைமாறாக, இறைவன் அவரை உயர்த்திப் பிடித்து அகில உலகின் ஆண்டவராக்கினார். தன் இறப்பு மற்றும் உயிர்ப்பின் மூலம், வாழ்வு மற்றும் மகிழ்வின் பாதையைக் காட்டினார். அதுவே தாழ்ச்சியின் பாதை. இதுவே மகிமைக்கு இட்டுச் செல்லும் பாதை. கல்லறைக்கு வந்த சீடர்கள் பேதுருவும் யோவானும் கல்லறை காலியாக இருப்பதைக் கண்டு, அதனுள் தலை குனிந்து சென்றனர். ஆம். மறையுண்மைக்குள் நுழைய நாமும் தலைகுனிந்து நம்மையேத் தாழ்த்திச் செல்லவேண்டும். எவ்விலை கொடுத்தாகிலும் அனைத்திலும் முன்வரிசைக்குச் செல்ல இவ்வுலகம் துடிக்கிறது. ஆனால், கிறிஸ்தவத்தின் வழியோ, தாழ்ச்சியின் வழி. அது, ஒருவர் மற்றவருக்கு பணியாற்றும் வழி. இது பலவீனமல்ல, மாறாக, அதுவே பலம். அன்பு, அழகு மற்றும் உண்மையின் வலிமை கொண்டுச் செயல்படுவோம். போரையும் வன்முறைகளையும் தூண்டும் வீண்பெருமைகளைக் கைவிடுவோம். அமைதி மற்றும் மன்னிப்பின் எளிமைநிறை வல்லமையை கைக்கொள்வோம்.



கிறிஸ்தவ விசுவாசத்திற்காக துன்புறுத்தப்படுவோர், போர்களால் பாதிக்கப்பட்டிருப்போர் ஆகியோரின் துன்பங்களுக்கு ஒளியூட்டுமாறு உயிர்த்த கிறிஸ்துவிடம் வேண்டுவோம். அமைதிக்காக இறைஞ்சுவோம், குறிப்பாக, ஈராக் மற்றும் சிரியாவிற்காக. இங்கு இடம்பெறும் மனிதகுல பேரிடர்களின் முன்னால், அனைத்துலக சமுதாயம் பாராமுகமாய் இருக்காதிருக்க செபிப்போம்.

---

குறிப்பு : **Urbi et Orbi (to the City [Rome] and to the World)** என்பது திருத்தந்தை சிறப்பு நிகழ்வுகளின் போது, எடுத்துக்காட்டாக கிறிஸ்துமஸ், ஈஸ்டர் அளிக்கின்ற சிறப்புச் செய்தியையும், திருத்தூது ஆசீர்வாதத்தையும் குறிக்கிறது.



புனித பூமியின் அமைதிக்காக செபிப்போம். அங்கு அமைதிப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் துவக்கப்பட்டு, துன்பங்களும் பிரிவினைகளும் அகலும் வழி பிறக்கட்டும். லிபியாவில் இரத்தச் சிந்தல்களும் வன்முறைகளும் முடிவுக்கு வந்து ஒப்புரவின் பாதை திறக்கப்பட செபிப்போம். அதுபோல், ஏமனிலும் அமைதி திரும்புவதற்கென நம் செபங்களை ஒப்புக்கொடுப்போம்.

Lausanneல் இடம்பெற்றுள்ள ஈரான் அணு ஆயுத ஒப்பந்தம், மேலும் பாதுகாப்பு மற்றும் சகோதரத்துவம் நிறைந்த உலகை நமக்கு வழங்கட்டும். நைஜீரியா, தென் சூடான், சூடானின் பல்வேறு பகுதிகள், காங்கோ ஜனநாயக குடியரசு ஆகியவைகளின் அமைதிக்காகச் செபிப்போம். கடந்த வியாழனன்று, கென்யாவின் Garisssa பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்த இளையோரை இப்போது நினைவுகூர்கிறேன். அனைவருக்காகவும் செபிப்போம். உக்ரைனில் அமைதி திரும்ப உதவுமாறு இறைவனிடம் வேண்டுவோம். குற்றக் கும்பல்களின் புதிய அடிமைத்தன வழிகளால் துன்புறும் மக்களுக்கு அமைதியையும் விடுதலையையும் இறைவனிடம் வேண்டுவோம். போதைப்பொருள் கடத்துவோரினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்காகவும், ஆயுத விற்பனைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் உலகிற்காவும் செபிப்போம். பொருளாதாரத்தில் பின்தங்கியிருப்போர், ஏழைகள், குடியேற்றக்காரர்கள், நோயாளிகள், துன்புறுவோர், குழந்தைகள், குறிப்பாக, வன்முறைக்கு உள்ளாக்கப்படும் குழந்தைகள், இந்நாளில் அழுகுரலை எழுப்பிக்கொண்டிருப்போர், நல்மனதுடையோர் என அனைவரும் ஆண்டவராம் இயேசுவின் "அமைதி உங்களுக்கு உரித்தாகுக" என்ற வார்த்தைகளுக்கு செவிமடுக்கட்டும். "அஞ்சாதீர்கள். நான் உயிர்த்தெழுந்துவிட்டேன். நான் எப்போதும் உங்களோடு இருப்பேன்" என்கிறார், இயேசு.

இவ்வாறு தன் "ஊருக்கும் உலகுக்கும்" என்ற ஊர்பி எத் ஓர்பி வாழ்த்துச்செய்தியை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அனைவருக்கும் கிறிஸ்து உயிர்ப்பு வாழ்த்துக்களை எடுத்துரைத்து, ஊர்பி எத் ஓர்பி ஆசீரையும் அளித்தார்.

ஆதாரம்: வத்திக்கான் வானொலி

# நற்செய்தி நிலையம்

*'உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற்கு 16:15)*

**அனைவருக்கும் அன்பின் உயிர்ப்புத் திருநாள் வாழ்த்துக்கள்!**

## செங்கோட்டை மிஷன் விவிலியக் கலைவிழாப் போட்டிகள்

செங்கோட்டை மிஷன், 2014-2015 ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழா போட்டிகள் பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதி சனிக்கிழமை அன்று செங்கோட்டை மிஷன் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நடத்தப்பட்டது. இயக்குநர் அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்கள் தலைமையில் அலுவலக பணியாளர், ஊக்குவிப்பாளர், அருட் சகோதரிகள், ஆசிரியர்கள் உட்பட்ட குழு அங்கு சென்று போட்டிகள் நடத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கினர். பரிசு பெற்ற அனைத்து மாணவ மாணவிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்கள். செங்கோட்டை மிஷனில் கலைப் போட்டிகள் நடைபெற ஒத்துழைத்த ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை ஜாண் பால் அவர்களுக்கும் அருட்தந்தை டோபின் அவர்களுக்கும் போட்டிகள் சிறப்பாக நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, போட்டிகள் தொடங்கும் நேரம் முதல் முடியும் வரை உடனிருந்து அயராது உழைத்த அருட்தந்தை கொச்சுமோன் அவர்களுக்கும் அருட்சகோ. ஆன்ஸ் CMC மற்றும் அனைத்து அருட்சகோதரிகளுக்கும் எங்கள் இதயங்களிந்த நன்றிகள்.

***போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் பின்வருமாறு***

**Sub-Junior Boys - Single Song**

I Shijo, Mekkarai
II Shalin V. Joseph, Vanjinagar
III Alain P.Jose, Vanjinagar

**Sub-Junior Boys - Speech**

I Mohan Raj, Vanjinagar
II Chandru M. Vanjinagar
III Shijo, Mekkarai



**Sub-Junior Boys - Bible Sentance Recitation**

I Alain P.Jose, Vanjinagar
II Shalin V. Joseph, Vanjinagar
III Shijo, Mekkarai

**Junior Boys - Single Song**

I Jithin .K ,Puliyarai

**Junior Boys - Speech**

I Jithin K., Puliyarai

**Senior Boys - Single Song**

I Shino, Mekkarai
II Abin Anto ,Vanji Nagar
III Jegan, Puliyarai

**Senior Boys - Speech :**

I Manikandan, Puliyarai
II Jegan, Puliyarai
III Abin Anto, Vanjinagar

**Senior Boys - Mono Act**

I Manikandan, Puliyarai
II Shino, Mekkarai
III Abin Anto, Vanjinagar

**Super senior Boys - Single Song**

I Jose A ,Puliyarai
II Alex A , Puliyarai

**Super senior Boys - Speech :**

I Shanmukham, Puliyarai
II Prithin .P, Puliyarai

**Sub- Senior Boys - Mono Act**

I Shanmukhan, Puliyarai
II Jishnu, Mekkaraio
III Alex A , Puliyarai

**Sub - Junior - Girls - Single Song**

I Afrin V, Vanjinagar
II Sneha Johnson, Vanjinagar
III Beula Jessy, Mekkarai

**Sub - Junior - Girls - Speech :**

I Afrin V., Vanjinagar
II Anju, Puliyarai
III Beaula Jessy, Mekkarai

**Sub. Junior Girls - Single Dance**

I Anju, Puliyarai
II Beaula Jessy, Mekkarai
III Sneha Johnson, Vanjinagar

**Junior Girls - Single Song**

I Irin Mariam P. , Vanjinagar
II Rajeshwari A., Puliyarai
III Blessy Anto, Vanjinagar

**Junior Girls - Speech**

I Irin Mariam .P, Vanjinagar
II Rajeshwari.A, Puliyarai
III Blessy Anto , Vanjinagar

**Junior Girls - Single Dance**

I Irin Mariam .P, Vanjinagar
II Rajeshwari.A, Puliyarai
III Blessy Anto, Vanjinagar

**Senior - Girls - Single Song :**

I Ishwariya , Puliyarai
II Devika, Puliyarai
III Santhra Johnson, Vanjinagar



**Senior Girls : Speech**

I Ishwariya, Puliyarai
II Santhra Johnson, Vanjinagar
III Devika, Puliyarai

**Senior Girls - Single Dance**

I Santhra Johnson, Vanjinagar
II Devika, Puliyarai
III Ishwariya, Puliyarai

**Sup. Senior Girls - Single Song**

I Reetha, Puliyarai
II Soorya, Puliyarai

**Sup. Senior Girls - Speech**

I Reetha, Puliyarai
II Soorya, Puliyarai

**Sup. Senior Girls - Single Dance**

I Preena, Puliyarai
II Reetha, Puliyarai

**Group Items :**

**Group Song - Boys & Girls**

I Vanjinagar
II Puliyarai
III Mekkarai

**One Act Play :**

I Vanjinagar
II Puliyarai

**அதிக புள்ளிகள் பெற்ற மறைக்கல்வி நிலையங்களின் பெயர் விபரம் பின்வருமாறு.**

| | | | |
|---|---|---|---|
| I | St. Little Flower Sunday School, Puliyarai | - | 122 Points |
| II | St. Mary's Sunday School, Vanjinagar | - | 89 Points |
| III | St. George Sunday School, Mekkarai | - | 25 Points |

**ஆசிரியர்களுக்கான போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர்களின் பெயர் விபரம் பின்வருமாறு**

**Single Song**

| | | | |
|---|---|---|---|
| I | Viji Jerom | - | Vanjinagar |
| II | Betty Anto | - | Vanjinagar |
| III | Vinobha | - | Puliyarai |

**Speech :**

| | | |
|---|---|---|
| I | Rose Mary | Vanjinagar |
| II | Alagammal | Puliyarai |
| III | Mary Cleetus | Puliyarai |

**Group Song**

| | |
|---|---|
| I | Vanjinagar |
| II | Puliyarai |

**ஆசிரியர்களுக்கான விவிலியக் கலைவிழா கலைப்போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்ற மறைக்கல்வி நிலையங்கள்**

| | | | |
|---|---|---|---|
| I | St. Mary's Sunday School, Vanjinagar | - | 21 Points |
| II | St. Little Flower Sunday School, Puliyarai | - | 10 Points |

**தகவல்கள் :**

1. மறைக்கல்வி மாணவர்களின் 2-ம் பருவத்தேர்வு (Std $^1/_2$ -Std IXவரை) ஏப்ரல் மாதம் 19-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும்.
2. தலைமையாசிரியர்களின் கூடுகை ஏப்ரல் மாதம் 18-ம் தேதி சனிக்கிழமை அன்று 2.30 மணிக்கு மறைக்கல்வி அலுவலகம் கல்லுவிளையில் நடைபெறும்.
3. வகுப்பு 10, 11, 12 ஆகிய மாணவர்களுக்கான 2-ம் பருவத் தேர்வு ஏப்ரல் மாதம் 26-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று அந்தந்த மறைவட்ட ஆலயங்களில் நடைபெறும்.

அருட்தந்தை **ஜெஸ்டின் செறுவேலில்**
இயக்குநர்.



# இளைஞர்களின் தவக்கால தியானம்

## Grace.com

நவீன உலகில் இளையோரை ஆன்மீகத்தில் ஆற்றுப்படுத்தவும், ஆற்றல்படுத்தவும் வேண்டிய அவசியத்தையும், அவசரத்தையும் கருத்தில் கொண்டு மார்ச் 13 மாலை 4.00 மணி முதல் 15 மாலை 4.00 மணி வரை 3 நாட்கள் தக்கலை சங்கமத்தில் வைத்து இளைஞர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய வலைதளம் 'ஆண்டவரின் அருள்' Grace.com என்ற சிந்தனையில் தியானம் நடத்தப்பட்டது. தென்காசி புதுவாழ்வு செபக்குழுவினர் தியானத்தை வழிநடத்தினார்கள். திருப்பலி, செபமாலை, ஒப்புரவு வழிபாடு, நற்கருணை ஆராதனை ஆகியவை நடைபெற்றது. சுமார் 45 இளைஞர்கள் பங்கேற்று பலனடைந்தனர்.

அருட்தந்தை **பெலிக்ஸ்**
இயக்குநர்.


**SACRED MUSIC TRAINING PROGRAMME - 2015**

By *TNBCLC, Tindivanam*

Days : **1st to 20th May 2015 (20 days)**
Venue : **St. Joseph's Matriculation School**, Mulagumoodu, Kanyakumari Dt.

(One of the following) **Subjects**



i) Keyboard ii) Vocal Music iii) Tabla iv) Guitar v) Violin

**Fee Details**

Registration : Rs 200/-
Tuition : Rs 2000/-
Boarding & Lodging : Rs 3000/-

Contact (for more details)

**Fr. JEYASEELAN**, Programme Coordinator, **Phone: 9443118725**
Diocese of Kuzhithurai,C/o. Bishop's House, Good News Centre, Unnamalaikadai, Marthandam - 629165, Kanyakumari District

## வின்செந்தியர்களுக்கான தவக்கால தியானம்

தக்கலை மறைமாவட்ட வின்செந்தியர்களுக்கான தவக்கால தியானம் 22.03.2015 ஞாயிற்றுக்கிழமை படந்தாலுமூடு திருஇருதய ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு பெயர் பதிவைத் தொடர்ந்து வின்செந்திய இளைஞர்கள் சார்பில் பாடற்பயிற்சி நடைபெற்றது. மத்திய சபை தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்கள் அனைவரையும் வரவேற்றார். அருட்தந்தை ஒய்ஸ்லின் சேவியர் அவர்கள் தியான உரையாற்றினார். தொடர்ந்து தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வரும் மத்திய சபையின் ஆன்மீக இயக்குநருமான பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினர். மதிய உணவுக்குப் பின் அருட்தந்தை ஒய்ஸ்லின் சேவியர் அவர்கள் தலைமையில் நற்கருணை ஆராதனை மற்றும் ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது. 165 வின்செந்தியர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வு மாலை 3.15 மணியளவில் சகோ. வில்சன் அவர்களின் நன்றியுரையுடன் நிறைவுற்றது. தவக்காலத்தில் வின்செந்தியர்களின் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு இத்தியானம் உதவிசெய்தது என்பதில் ஐயமில்லை.

சகோ. **சுரேஷ் குமார்**, செய்தித்தொடர்பாளர்




## புலரி கோல்டு ஸ்டோரேஜ்

புலரி அச்சகத்தின் அருகாமையில் புலரி கோல்டு ஸ்டோரேஜ் நிலையத்தை 04.04.2015 பிற்பகல் 2.30 மணிக்கு தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் ஆசீர்வதித்து தொடங்கி வைத்தார்கள். இந்நிலையத்தில் உயர்தரமான மீன்களும், அரசு அனுமதி பெற்ற சொந்தமான வெண் பன்றி பண்ணையில் தயாரிக்கப்பட்ட பன்றி இறைச்சியும் நியாயமான விலையில் விற்பனைச் செய்யப்படுகின்றது. அனைவரும் இச்சேவையைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புக்கு..7598116633




# இல்வாழ்வு இயக்கம்

### திருமண பயிற்சி வகுப்புகள்

திருமணப் பயிற்சி வகுப்புகள் மார்ச் 21 முதல் 23 வரை 3 நாட்கள் தக்கலை சங்கமத்தில் அருட்தந்தை ஜிம்மி, அருட்சகோ.ஜோஷியா, செல்வி சுதா ஆகியோர்களின் வழிகாட்டுதலுடன் நடைபெற்றன. 28 பேர் கலந்து கொண்டு சான்றிதழ்கள் பெற்றனர். அடுத்த வகுப்புகள் மே 15 மாலை 5 மணி முதல் 17 மாலை 4.00 மணி வரை நடைபெறும். பயிற்சிக் கட்டணம் ரூ 500/

### மாதர் ஜோதிஸ்

மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் ஏப்ரல் மாத சிந்தனை தூய ஜார்ஜியார் திருநாள் (ஏப் 24) ஆகும். ஆகவே ஜார்ஜியாரின் பாதுகாவலைப் பெற எவ்வாறு செபிக்கலாம்? தூய ஜார்ஜியாரை அதிகமாக வழிபடக் காரணம் என்பது பற்றி விவாதிக்கவும், விருப்பமுடைய புனிதரைப் பற்றிய பாடல் போட்டி நடத்தவும் வேண்டும். திருப்பணியாக தூய ஜார்ஜியாரின் பெயர்கொண்ட நம் ஆயர் அவர்களை நேரடியாக சந்தித்து பெயர் கொண்ட திருநாள் வாழ்த்துக்களைக் கூறல் வேண்டும்.

மாதர் ஜோதிஸ் கூடுகைகள் 2015ஆம் ஆண்டு திட்டத்தின்படி நடத்த வேண்டும். ஆண்டுத்திட்டம் கிடைக்காதவர்கள் கல்லுவிளை இல்வாழ்வு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

### வந்து பாருங்கள் செபக்குழு

வந்து பாருங்கள் செபக்குழுவின் மார்ச் மாத தியானங்கள் மார்ச் முதல் சனி அழகிய மண்டபம் பிரான்சிஸ்கன் கிளாரா இல்லத்திலும், இரண்டாம் சனிக்கிழமை பளுகல் ஆலயத்திலும், மூன்றாம் சனிக்கிழமை பாலப்பள்ளம் ஆலயத்திலும் நடைபெற்றது. இத்தியானத்தில் திருப்பலி, தியான உரை, குணமளிக்கும் ஆராதனை, மற்றும் அன்பின் விருந்து ஆகியவை நடைபெற்றது. ஏப்ரல் மாத தியானத்தில் பங்கேற்க அன்பாய் அழைக்கிறோம்.

### தசாம்சா கிளப்

மார்ச் மாத தசாம்சா கிளப் கூடுகை கழுவன்திட்டை திரு.ராஜசேகரன் இல்லத்தில் நடைபெற்றது. தசமமாய் கிடைத்த 12522 ரூபாயின் ஒரு பகுதி வீடு புனரமைக்கவும், மீதி கழுவன்திட்டை குருசடி கட்டவும் வழங்கப்பட்டது.

**தந்தையர் நல்வாழ்வு இயக்கம்**

தந்தையர் நல்வாழ்வு இயக்கத்தின் செயல்முறைகள் அடங்கிய புத்தகம் விரைவில் அனைத்து பங்குகளுக்கும் வழங்கப்படும். அனைத்துப் பங்குகளிலும் தந்தையர் இயக்கம் தொடங்கி செயல்படுத்த அன்பாய் கேட்டுக்கொள்கிறேன்.

# FAMILY APOSTALATE

കല്ലുവിള Family Apostalate കേന്ദ്രത്തിൽ ചൊവ്വ, ബുധൻ, വ്യാഴം ദിവസങ്ങളിൽ മദ്യപാനികൾക്കും, മനോരോഗികൾക്കും ചികിത്സ നൽകുകയും, കുടുംബ പ്രശ്നങ്ങൾക്ക് Family Counselling നൽകുകും ചെയ്യുന്നു.

**Pre-Marriage Guidance Cource :** മാർച്ച് 20, 21, 22 തീയതികളിൽ സംഗമത്തിൽ നടന്ന Course - ൽ 28 പേർ പങ്കെടുത്തു. Rev. Fr. Jimmy, Sr. Josya, Miss. Suda എന്നിവർ നേതൃത്വം നൽകി. അടുത്ത Course മെയ് 15, 16, 17 തീയതികളിൽ സംഗമത്തിൽ നടക്കും വെള്ളി വൈകിട്ട് 5 ന് ആരംഭിച്ച് ഞായർ വൈകിട്ട് 4 ന് തീരും Fees 500/- രൂപ.

**Mathrujothis :** 2015 - ലെ മാർഗ്ഗരേഖയനുസരിച്ച് മീറ്റിംഗ് കൂടാൻ പരിശ്രമിക്കണം. മാർഗ്ഗ രേഖ കിട്ടാത്തവർ കല്ലുവിള Family Apostalate കേന്ദ്രവുമായി ബന്ധപ്പെടുക. ഏപ്രിൽ മാസ പഠന വിഷയം : വി. ഗീവർഗീസ് (ഏപ്രിൽ 24)

വിശുദ്ധന്റെ മാദ്ധ്യസ്ഥ ശക്തി, വിശുദ്ധരോട് പ്രാർത്ഥിക്കണമോ? വേണ്ടയോ?

വി. ഗീവർഗ്ഗീസ് കൂടുതൽ വണങ്ങപ്പെടാൻ കാരണം?

**ദൗത്യം :** വിശുദ്ധന്റെ നാമധാരിയായ അഭിവന്ദ്യ ജോർജ് രാജേന്ദ്രൻ പിതാവിനെ സന്ദർശിച്ച് Feast മംഗളങ്ങൾ നേരുക.

**മത്സരം :** ഇഷ്ടപ്പെട്ട വിശുദ്ധനെക്കുറിച്ചുള്ള ഗാനമത്സരം

Mount St. Thomas - ൽ നടന്ന മാതൃവേദി മീറ്റിംഗിൽ മറൈമാവട്ട ഭാരവാഹികൾ പങ്കെടുത്തു.

**Vantu Parungal Prayer Group :**

മാർച്ച് ആദ്യ ശനി അഴകിയമണ്ഡപം F.C.C. House - ലും 2 - ാം ശനി 92 - ാമത് ഏകദിന ധ്യാനം പളുകൽ ചർച്ചിലും 3 - ാം ശനി പാലപ്പള്ളം ചർച്ചിലും നടന്നു. ഏപ്രിൽ മാസവും പ്രസ്തുത സ്ഥലങ്ങളിൽ വച്ച് ഇതേ തീയതികളിൽ ഏകദിന ധ്യാനവും, സൗഖ്യശുശ്രൂഷയും സ്നേഹ വിരുന്നും നടക്കും. ഏവർക്കും സ്വാഗതം.

**Desumsa Club :** ദശാംശ ക്ലബ്ബിന്റെ മാർച്ച് മാസ കൂട്ടായ്മ Bro. രാജശേഖരൻ കഴുവൻതിട്ടയുടെ ഭവനത്തിൽ നടന്നു. ദശാംശമായി ലഭിച്ച 12522/- രൂപ വീതിച്ച്



ഒരു ഭാഗം ഒരു ഭവന നിർമ്മാണത്തിനും ഒരു ഭാഗം കഴുവംതിട്ട കുരിശടി നിർമ്മാണത്തിനുമായി നൽകി. ഇതുവരെ ജീവകാരുണ്യ പ്രവർത്തനങ്ങൾക്കായി നിക്ഷേപിച്ച ദശാംശം 473123 രൂപ. ദശാംശ ക്ലബ്ബ് പുനിത ചാവറ, പുനിത എവ്പ്രാസ്യ അനുസ്മരണത്തിനായി 2000 രൂപ നൽകി.

**Thanthayar Nalvazhuvu Iyakkam**

വിവാഹിതരായ പുരുഷന്മാരുടെ ഭക്ത സംഘടന (തന്തയർ നൽവാഴ്വ് ഏക്കം) മാർഗ്ഗ രേഖ താമസിയാതെ എല്ലാ പങ്കുകളിലേക്കും എത്തിക്കുന്നതാണ്. ഭക്ത ഏക്കം പങ്കുകളിൽ ആരംഭിക്കണമെന്ന് താത്പര്യപ്പെടുന്നു. മാലേക്കോട് Holy Cross Church തന്തയർ നൽവാഴ്വ് ഏക്കം പുനിത ചാവറ, പുനിത എവുപ്രാസ്യ അനുസ്മരണത്തിനായി 2000/- രൂപയ്ക്കും K.K.S.S.S. EDUCARE പദ്ധതിയിൽ ഒരു കുട്ടിയെ Sponsor ചെയ്യുകയും ചെയ്തു.

Rev. Fr. Joseph Nedumpuram
Director



**பள்ளிக்கோணம் இல்லங்களில் திருத்தொண்டுப்பணி நிறைவு**

பள்ளிக்கோணம் திருஇருதய ஆலயத்தில் இல்லங்களில் திருத்தொண்டு பணி நடைபெற்று நிறைவடைந்தது. இதன் நிறைவு விழா 08.03.2015 ஞாயிறு மாலை 3 மணிக்கு ஆயர் **மார் ஜார்ஜ் இராஜேந்திரன்** SDB அவர்கள் தலைமையில் திருப்பலியுடன் நடைபெற்றது. திருப்பலியின் போது குடும்பமாக நின்று தேவ நற்கருணை பெற்றுக்கொண்டார்கள். தொடர்ந்து, அருட்தந்தை ஷோஜோ அவர்கள் தியான உரை வழங்கினார்கள். இல்லங்களில் திருத்தொண்டு நடத்துகின்ற அருட்சகோதரிகள் நற்கருணை ஆராதனை நடத்தினார்கள். தொடர்ந்து பெற்றோர் பிள்ளைகள் கை வைத்தல் செபம் நடந்தது. பேரருட்தந்தை சக்கோ பேசில் CMI அவர்கள் Home Mission வழியாக கிடைத்த நன்மைகள் பற்றி விளக்கி கூறி நன்றியும் ஆசியும் வழங்கினர், பின் அன்பின் விருந்துடன் விழா இனிதே நிறைவடைந்தது.

**பைஜு** CMI, பங்கு தந்தை

## அருட்சகோதரர்களிடமிருந்து...

அனைத்து அருட்சகோதரர்களும் தங்களின் ஆண்டிறுதித் தேர்வை நிறைவு செய்தனர். சத்னா குருத்துவக்கல்லூரி அருட்சகோதரர்களின் வகுப்புகள் ஏப்ரல் 15 அன்று நிறைவடையும். வடவாதூர், ஆலுவா, திருச்சூர், உஜெயின் குருத்துவக் கல்லூரிகள் முறையே மார்ச் 10, 14, 15, 26 அன்றுமுதல் விடுமுறை வழங்கின. முக்கூட்டுக்கல் இளங்குருமட அருட்சகோதரர்களுக்கு மார்ச் 28 முதல் விடுமுறை வழங்கப்பட்டது.

### திருநிலைப்பாடுகள்

அருட்சகோதரர் வினு அவர்கள் கெவுப்புதியாக்கோனாகவும், அருட்சகோதரர் ஜெபனேஷ் அவர்கள் காறோயாவாகவும் மார்ச் 30 அன்று ஆயர் அவர்களால் சங்கமத்தில் வைத்து திருநிலைப்படுத்தப்பட்டார்கள். அருட்சகோதரர் அபிலாஷ் அன்றைய நாள் ஆயர் அவர்களிடமிருந்து குருத்துவ திருஉடையும் பெற்றுக்கொண்டார்.

### திருத்தொண்டர்கள்

அருட்சகோதரர்கள் அனில்ராஜ், அஜின்ஜோஸ், சாமுவேல், ஜெஸ்டின் சுதிஷ் மற்றும் ரிட்டோ ஆகியோர்கள் ஏப்ரல் 1 அன்று மாலை 5.30 மணிக்கு மாங்கரை ஆலயத்தில் வைத்து திருத்தொண்டர்களாக ஆயர் அவர்களால் திருநிலைப்படுத்தப் பட்டார்கள்.

### குருத்துவ அருட்பொழிவு

திருத்தொண்டர்கள் ஷோஜி, அஜிஸ், ஜோஸ், பிரின்டோ, வினோத், எபின் மற்றும் சுமேஷ் ஆகியோர்கள் உயிர்ப்பு முதல் வாரத்தில் ஆயர் அவர்களால் தங்களின் சொந்த பங்குகளில் குருவாக அருட்பொழிவு திருநிலைப்படுத்தப்பட இருக்கிறார்கள்.

அனைவருக்கும் உயிர்ப்பு திருநாள் நல்வாழ்த்துக்கள்..

திருத்தொண்டர் **அனில்ராஜ்,**
குருமாணவர் தலைவர்

**Pope Francis**
**TWEETS**



**Pope Francis** @Pontifex Mar 23
May every Church and Christian community be a place of mercy amid so much indifference.



## சிறப்புப்பள்ளிகளின் ஆண்டுவிழா

பருத்திவிளைசாந்தி நிலையம்

சாந்திநிலையம் B.T.K. Vidyalaya சிறப்புப்பள்ளியின் 21 வது ஆண்டு விழாவும், பேரருட்சகோதரி மாக்தலீன் அவர்களின் 50-வது ஜுபிலி விழாவும் 24-3-2015 அன்று பள்ளியின் பாதுகாவலரான வணக்கத்திற்குரிய ஆயர் மார் தாமஸ் குரியாளச்சேரி அவர்களின் இறை ஆசியுடன் மாலை 5.30 மணிக்கு பள்ளியில் வைத்து நடைபெற்றது. பள்ளி ஆசிரியை திருமதி. S.அனிதா அனைவரையும் வரவேற்று பேசினார்கள். விழாத் தலைவராக




அல்போன்சா பங்கு பணியாளரும், அல்போன்சா மெட்ரிக் பள்ளி தாளாளருமான அருட்தந்தை. தாமஸ் பவ்வத்து பரம்பில் அவர்கள் கலந்துக் கொண்டு " அன்னை தெரசாவின் அருட்பணியை ஒத்த இப்பணியும் கடவுளின் பணி ஆகும். அப்பணிச் செய்து வரும் இவர்களுக்கு என்ன நன்றி சொன்னாலும் ஈடில்லை என்ற கருத்தில் தலைமையுரை ஆற்றி, பேரருட்சகோ. மாக்தலீன அவர்களுக்கு ஜுபிலி வாழ்த்தும் கூறினார். பள்ளியின் மீதும் மாணவர்கள் மீதும் கொண்ட அன்பினால் மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக விழாவிற்கு வருகை தந்த தக்கலை மறைமாவட்ட ஆயர் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் பேரருட்சகோ. மாக்தலீன அவர்களுக்கு ஜுபிலி வாழ்த்து கூறியதோடு, மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நமக்கு விழிப்புணர்வு ஊட்டுவனவாக உள்ளது என்று கூறி மாணவர்களுக்கும் அவர்களுக்கு பயிற்சியளித்த ஆசிரியர்களுக்கும், அருட்சகோதரிகளுக்கும் பாராட்டு தெரிவித்தார்கள். ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி முதல்வர் திரு. S. வடிவேல் முருகன் M.D. மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு. K.B. பிரம்மநாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்டு "உண்மையான அன்பு எந்த பிரதிபலனும் பாராமல் தானாக வருவது" என்ற கருத்தில் சிறப்புரையாற்றினார்கள். தமிழ்நாடு CMI வட்டாரத்தலைவர் அருட்பணி. லூக்கா கொல்லம் பரம்பில் CMI மற்றும் ஆராதனை சபை வட்டாரத் தலைவி. அன்னை. ரோஸ் கானாச்சேரி SABS ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு மாணவர்களின் கலைத்திறன்களை வெளிக்கொண்டு வர அருட்சகோதரிகளும், ஆசிரியர்களும் எவ்வாறு உழைத்திருக்கிறார்கள் என்பதை இப்பள்ளி ஆண்டுவிழாவை பார்க்கும்போது தெரிகிறது என்று

வாழ்த்து கூறினார்கள். இடையிடையே மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் திரு. ஜோஸ் அவர்கள் நன்றி கூற விழா இனிதே நிறைவுபெற்றது.

## பாலப்பள்ளம் ஜோதிநிலையம்

ஜோதி நிலையம் மனவளர்ச்சி குன்றியோர் சிறப்புப் பள்ளியின் 16-வது ஆண்டுவிழாவானது 17.3.2015 அன்று மாலை 5 மணி அளவில் ஆரம்பமானது. விழாத்தலைவராக SABS தமிழ்நாடு வட்டாரத் தலைவி மதர். ரோஸ் கானாச்சேரி SABS அவர்களும், சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு. பிரம்மநாயகம் மற்றும் பாலப்பள்ளம் பங்குதந்தை Rev. Fr. ஜஸ்டின் செறுவேலில் அவர்களும் கலந்து கொண்டார்கள்.



Fr. ஜஸ்டின் செறுவேலில் அவர்கள் குத்துவிளக்கேற்றி விழாவினை துவக்கி வைத்தார்கள். விழாவில் Mrs. வில்சி ஆசிரியை வரவேற்புரை நல்க, மாணவச் செல்வங்களின் நடனம், பாடல், விழிப்புணர்வு நாடகம் போன்றவை நடைபெற்றது. பள்ளியின் ஆண்டறிக்கை முதல்வர் Sr. Jyothis அவர்களால் வாசிக்கப்பட்டது. மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசினை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் வழங்கினார். ஆசிரியர்களுக்கான பரிசினை குருகுல முதல்வர் Very Rev. Fr. ஜோஸ் முட்டத்துப்பாடம் வழங்கினார். அனைத்து மாணவர்களுக்கும் இலவச சீருடை Winstar Sports Club - Palapallam நிர்வாகத்தால் வழங்கப்பட்டது. எம் பள்ளியின் முன்னாள் தாளாளர் மதர். மேக்தலின் SABS அவர்களின் அர்ப்பண வாழ்வின் 50-ஆம் ஆண்டு சிறப்பிக்கப்பட்டது. பின் அனைவருக்கும் இரவு உணவு D.M. குழுமத்தால் வழங்கப்பட்டது. பின் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் திரு. பன்னீர் செல்வம் நன்றி கூற சுமார் 8.30 மணி அளவில் நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவுற்றது.

## தெற்றியோடு ஆசீர் வித்யாலாயா

தெற்றியோடு ஆசீர் வித்யாலாயா மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகள் சிறப்புப் பள்ளியின் ஆண்டுவிழா மார்ச் 14 அன்று மதியம் 3.30 மணியளவில் மாணவர்களின் வரவேற்புடன் ஆரம்பமானது. நாகர்கோவில் அல்போன்சா திருத்தல அதிபர் அருட்தந்தை தாமஸ்



பல்வத்துப்பறம்பில் அவர்கள் தலைமை தாங்கினார். தலைமைஆசிரியை அருட்சகோதரி மேரி டோம் அவர்கள் அறிக்கை சமர்பித்தார்கள். ஊனமுற்றோர் மறுவாழ்வு நல அலுவலர் திரு பிரம்ம நாயகம், அல்போன்சா கல்லூரி தாளாளர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் மற்றும் F.C.C துறவற சபையின் வட்டார தலைவி அருட்சகோதரி சீலியா ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்கினர். மாற்றுத்திறனாளிகளின் கண்கவர் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

## கல்லுவிளை, கருணாலயம்

எமது கருணாலயம் கல்விக்கூடத்தின் 16 ஆம் ஆண்டு விழாவானது 2015 மார்ச் மாதம் 26ஆம் நாள் மதியம் 4 மணிக்கு குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களின் தலைமையில் கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் வைத்து இனிதே ஆரம்பமானது. சிறந்ததொரு தலைமையுரை ஆற்றியதோடு குத்துவிளக்கு ஏற்றி வைத்து விழாவை துவங்கினார் குருகுல முதல்வர். C.M.C துறவற சபையின் தக்கலை வட்டார



தலைவி அருட்சகோதரி விஜி அவர்கள் ஆசி உரையும், உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு நல அலுவலர் திரு கெ.பி. பிரம்ம நாயகம் அவர்கள் சிறப்புரையும் வழங்கினார். வேர்க்கிளம்பி இந்தியன் வங்கியின் தலைவர் திரு. எம். ஆன்ட்ரு மார்சிலின், அவர்கள் மனமார வாழ்த்தி வாழ்த்துரை வழங்கினார். குழந்தைச் செல்வங்களின் திறமைகளை வளர்த்தும் விதமாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற கண்மணிகளுக்கு பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் மற்றும் பள்ளி தாளாளர் அருட்சகோதரி விமல் ரோஸ் அவர்களால் பரிசுகளும் வழங்கப்பட்டன. ஆண்டுவிழாவின் சுவையை அதிகரிக்கும் வண்ணமாக பள்ளி மாணவச் செல்வங்களின் குழுநடனம், பாடல், பரதநாட்டியம், நாடகம், யோகா, பிரமீடு, மைம் போன்ற பல வண்ண கலைத்திறன்களும் இக்கூட்டத்தில் இடம்பெற்றன. பள்ளிக் கூடத்தின் பெற்றோர் ஆசிரியர் கழக செயலர் திருமதி ஜாஸ்பின் அவர்கள் அனைவருக்கும் நன்றி மலர்களை நன்றியுரையாக வழங்கினார். எமது கல்விக் கூட 16 ஆம் ஆண்டுவிழா சிறப்புற நடைபெற்றிட தங்களது வருகையாலும் உடல், உள்ள ஒத்துழைப்பாலும் உதவிக்கரம் நீட்டிய எல்லா இனிய உள்ளங்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றி!!

அருட்சகோதரி. **ஆன்மரியா** CMC
தலைமையாசிரியர்.

# திருத்தொண்டுப் பணிக்குழு பயிற்சி

மறைமாவட்ட திருத்தொண்டுப் பணிக்குழுவின் பயிற்சியானது, 29.03.2015 ஞாயிறு அன்று படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் வைத்து அருட்தந்தை தோமஸ் தக்கலை அவர்கள் தலைமையில் நடைபெற்ற செப வழிபாடோடு தொடங்கியது.

சுமார் 2.30 மணிக்கு ஆலய சமூக அரங்கில் மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தொடக்க



உரையாற்றி கூட்டத்தை தொடங்கி வைத்தார்கள். கூட்டத்தின் தேவைகளையும், பணிகளையும் குறித்து திரு. சௌந்தரராஜ் அவர்கள் வகுப்பு நடத்தினார்கள். விவிலியத்தில் திருத்தொண்டு பணிகள் குறித்து விவிலிய மேற்கோள் காட்டி அருட்தந்தை மாத்யூ குழிஞ்ஞாலில் அவர்கள் கருத்துரை வழங்கினார்கள். வகுப்பு நடத்தினார்கள். தொடர்ந்து திரு. மரியதாஸ் அவர்கள் தொடக்கக் கால திருத்தொண்டு பணிகளின் தேவை குறித்தும், தற்பொழுது நடைபெற வேண்டிய பணிகள் குறித்தும் விளக்கி கூறினார்கள். பின்னர் திருத்தொண்டுப் பணிக்குழுவினர் திருமதி. றோஸ்மேரி, திருமதி. பேபி சுசீலா, சகோதரி. மேரி டோம், திரு. ஜெயன், திரு பெர்லின் ஆகியோர்களின் வழிகாட்டுதலில், 4 குழுக்களாக பிரித்து குழு ஆய்வு நடைபெற்றது.

## குழு ஆய்வின் தலைப்புகள் :

1. பெற்ற அருள்வாழ்வை பகிர்ந்து அளிப்பது கிறிஸ்தவர்களின் தலையாய கடன் எனில் இவ்வாழ்வை பிறரும் பெற்றிட நாம் எவ்வாறு பணி செய்யலாம்.
2. அறுவடையோ மிகுதி; வேலையாட்களோ குறைவு என்ற கூற்றுக்கு உங்கள் பதில்
3. நமது முந்தைய ஆன்மீக நிலை என்ன? இன்று நாம் எந்நிலையில் உள்ளோம்.
4. சென்று போதியுங்கள் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள் என்ற இறையேசுவின் அழைப்பை எவ்வாறு செயல்படுத்தலாம்.

குழுக்கள் தத்தம் அறிக்கைகளை செயலர்கள் மூலமாக அவையில் சமர்பித்தார்கள். திருத்தொண்டுப் பணியாளர்களின் தேவையும், உணர்வும் குறித்து பேசியதோடு, அருட்தந்தை தோமஸ் தக்கலை தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்றார். இறுதியில் திரு. ரமேஷ் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

திரு. **எட்வின்சன்,** செயலர்



## BIRTHDAY'S AND FEAST DAY'S

| | | |
|---|---|---|
| FR. MADAPPURACKAL ANTONY | : | APRIL 01 |
| FR. THEKKEKADUMATHIL JIMMY | : | APRIL 04 |
| FR. PUTHENPURACKAL JOSY | : | APRIL 10 |
| FR. VARAVUMKAL ANTONY MCBS | : | APRIL 10 |
| FR. MUNDUNADACKAL DENCY | : | APRIL 14 |
| FR. ARUVIYIL JOSEPH CMI | : | APRIL 22 |
| FR. AIYAMMATRA JACOB ZACHARIA | : | APRIL 22 |

## FEAST DAY'S

| | | |
|---|---|---|
| FR. GEO CHUZHIKKUNNEL | : | APRIL 24 |

**BISHOP MAR GEORGE RAJENDRAN SDB**

BIRTHDAY: **APRIL 14** & FEAST DAY: **APRIL 24**



**குமரியில் கால் பதித்த குலமகன்**
**மார் தோமா வழியில்**
**குருத்துவம் எனும் தனித்துவம் பெற்று**
**ஆயனற்ற ஆடுகள் மேய்க்க அழைப்பு பெற்று**
**நல்லாயனாய் வந்தவரே;**
**எக்கலையும் மக்கள் பெற உழைப்பவரே;**
**தக்கலையும் உமைகண்டு தலைவணங்குதே;**
**பிற மனங்களில் பிறப்பெடுத்த உமக்கு**
**பிறப்புத் திருநாள் வாழ்த்தோடு......**
**நலமுடன் வாழ நாமத்திருநாள் நல்வாழ்த்துகளும்**
**நவில்கிறது தக்கலை மறைமாவட்டம்...**




# അനുശോചനം

ചങ്ങനാശേരി അതിരൂപതാംഗവും അതിരൂപതാ മതർ പ്രൊക്യുറേറ്ററും ആറുകാണി ഇടവകയുടെ പ്രഥമ വികാരിയുമായിരുന്ന ഫാദർ ജേക്കബ് തോട്ടനാനിയിൽ (84) നിര്യാതനായി. കോട്ടയം ജില്ലയിലെ കോട്ടയ്ക്കപ്പുറം പരേതരായ കുര്യൻ - മറിയം ദമ്പതികളുടെ മകനായി 13.1.1931 ൽ ജനനം. 12.3.1960 ന് ധന്യശരീരനായ മാർ മാത്യു കാവുകാട്ട് പിതാവിൽ നിന്നും വൈദികപട്ടം സ്വീകരിച്ചു. അമ്പൂരി ഫൊറോന പള്ളി സഹ വികാരിയായും തുടർന്ന് ആറുകാണി ഇടവകയുടെ പ്രഥമ വികാരിയായും നിയമിതനായി. ഇന്നത്തെ ആറുകാണിയുടെ എല്ലാ വളർച്ചയ്ക്കും കാരണമായ ബഹു. ജേക്കബച്ചന്റെ ദീർഘ വീക്ഷണത്തോടു കൂടിയ പ്രവർത്തനങ്ങളായിരുന്നു. കൂട്ടപ്പൂവിൽ നിന്നും ആറുകാണി വഴി കുഴിത്തുറയ്ക്കുള്ള റോഡിന്റെ പേണു വരെയുള്ള ഭാഗത്തിന്റെ പ്രാരംഭ നിർമ്മാണം നടത്തിയത് പ്രിയ ജേക്കബ്ബച്ചനായിരുന്നു. റോഡോ യാത്രാ സൗകര്യമോ ഇല്ലാതിരുന്ന കാലത്ത് അമ്പൂരി മുതൽ പേണു വരെ 13 കിലോമീറ്റർ ദൂരം കാൽനടയായി യാത്ര ചെയ്ത് ആറുകാണി, പത്തുകാണി, പേണുത്തടം തുടങ്ങിയ പ്രദേശങ്ങളിലെ വിശ്വാസികളുടെ ആത്മീയവും ഭൗതികവുമായ കാര്യങ്ങളിൽ അച്ചൻ ആത്മാർത്ഥമായി ശ്രദ്ധിച്ചിരുന്നു. ഒരു നല്ല കർഷകൻ കൂടിയായിരുന്ന ജേക്കബ്ബച്ചൻ നേരിട്ടാണ് ആറുകാണിയിലും പത്തുകാണിയിലുമുണ്ടായിരുന്ന പള്ളിവക സ്ഥലങ്ങളിൽ കൃഷിപ്പണികൾ നടത്തിയിരുന്നത്. 1967 -ൽ ആറുകാണിയിൽ നിന്നും സ്ഥലം മാറിപ്പോയത് കാഞ്ഞാങ്ങാട് പെരുന്തടി എസ്റ്റേറ്റിലേക്കായിരുന്നു. അവിടുത്തെ നീണ്ടകാല ത്യാഗ നിർഭരമായ സേവനത്തിനുശേഷം അയർക്കുന്നം, ചമ്പക്കുളം, ചെറുവാണ്ടൂർ, പങ്ങട, അമ്പൂരി ഇടവകകളിൽ തുടർന്നും സേവനമനുഷ്ഠിച്ചു. സേവനമനുഷ്ഠിച്ച മുഴുവൻ ഇടവകകളിലും തന്റേതായ വ്യക്തിമുദ്ര പതിപ്പിച്ച ബഹു: ജേക്കബ്ബച്ചൻ 21.3.2015 തന്റെ നിത്യ സമ്മാനത്തിനായി വിളിക്കപ്പെട്ടു. അച്ചന്റെ ആത്മാവിന് നിത്യശാന്തി നേർന്ന് കൊള്ളുന്നു.

## இறைமடியில் அருட்தந்தை ஜேக்கப் தோட்டனானி

சங்கனாச்சேரி உயர்மறைமாவட்டத்தின் உறுப்பினரும் பேராய முன்னாள் பொருளாளரும் ஆறுகாணி பங்கின் முதல் பங்குத்தந்தையுமான அருட்திரு **ஜேக்கப் தோட்டனானி** அவர்கள் கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டத்தில் கோட்டப்புறம் என்னுமிடத்தில்



திரு. குரியன் மரியம் இணையருக்கு மகனாய் 13-01-1931-ல் பிறந்தார். சங்கனாச்சேரி உயர்மறை மாவட்ட பேராயர் மார் மாத்தியூ காவுகாட் அவர்களால் 12-03-1960 -ல் குருப்பட்டம் பெற்று அம்பூரிக்கு உதவிப் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து ஆறுகாணிக்கு முதல் பங்குதந்தையாக பணியமர்த்தப்பட்டு, ஆறுகாணியின் இன்றைய வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாகத் திகழ்ந்தார். பொதுநல சேவகரான அவர் கூட்டப்பூவிலிருந்து ஆறுகாணி வழியாக குழித்துறை செல்ல பேணுத்தடம் வரை சாலை உருவாக பணிகளை முதலில் தொடங்கியவரும், தொடர்ந்தவரும் அவரே ஆகும். சாலை வசதி, வாகன வசதி இல்லாத அக்காலத்தில் அம்பூரியிலிருந்து பேணுவுக்கும், ஆறுகாணியிலிருந்து பத்துகாணி, பேணு, நெட்டா போன்ற இடங்களுக்கும் கால்நடையாகச் சென்று விசுவாசிகளின் ஆன்மீக பொருளாதார வளர்ச்சிக்கு தன்னை முழுவதும் அர்ப்பணித்து அரும்பெரும் தொண்டாற்றினார். ஒரு சிறந்த விவசாயியான இவர் தனது பங்கிற்குட்பட்ட இடங்களில் தனது நேரடிப்பார்வையில் விவசாயம் செய்தார். 1967-ல் ஆறுகாணியிலிருந்து காஞ்ஞாங்காடு பெருந்தடி தோட்டத்திற்கு மாற்றம் பெற்று நீண்டகால சேவைக்குப் பின்னர் அயர்குற்றம், சம்பக்குளம், செறுவாந்தூர், பங்கட, அம்பூரி போன்ற பங்குகளில் இறைப் பணியாற்றி, மக்களின் மனதில் தனக்கென நீங்காத ஓர் இடத்தை பிடித்த சேவைச் செம்மல் 21-3-2015 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆன்மா இறைவனில் நித்திய அமைதி கொள்ள செபிப்பதோடு, அவரது பணிகளுக்கு நன்றியும், அவரது பிரிவால் துயரப்படுவோருக்கு ஆழ்ந்த இரங்கலையும் தக்கலை மறைமாவட்டத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. **ஜோஸ் பெருமன**
ஆறுகாணி

---

## Pope Francis TWEETS



**Pope Francis** @Pontifex Mar 31
Confession is the sacrament of the tenderness of God, his way of embracing us.



**Pope Francis** @Pontifex Mar 30
Holy Week is a privileged time when we are called to draw near to Jesus: friendship with him is shown in times of difficulty.

# விழுதுகள்-6

## திருக்குடும்ப ஆலயம், முக்கூட்டுக்கல்

"ஈசோ தம் சீடர்களை நோக்கி உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற். 16:15) என மொழிந்த கட்டளையை நிறைவேற்றும் வண்ணமாக நம் தந்தையாகிய மார் தோமையார் கி.பி. 52-ம் ஆண்டு இந்தியா வந்தார்.



தோமையாரின் வழித்தோன்றலாக உருவான சீரோ மலபார் திருச்சபையின் சங்ஙனசேரி மறைமாநிலத்தின் தென் எல்லையான குமரி மண்ணில் முக்கூட்டுக்கல் என்ற இடத்தில் சங்ஙனாசேரி ஆயர் மார் மாத்யூ காவுக்காட் ஆண்டகையால் 1961-ல் மறைபரப்புப்பணி இங்கு ஆரம்பமானது.

அருட்தந்தை ஜோசப் மடத்தில் அவர்கள் முக்கூட்டுக்கல் என்ற இடத்தில் ஒரு ஓலைக் குடிசையில் தம் பணியை ஆரம்பித்தார். இக்குடிசையில் வைத்து திருப்பலியும் காலை, மாலை, வேளைகளில் வேதபாடங்களும் கற்பிக்கப்பட்டது. பின்னர் தற்போது ஆரம்பப்பள்ளியாகச் செயல்படும் இடத்தை விலைக்கு வாங்கி ஒரு பெரிய ஓலைக்குடிசையைக் கட்டி திருப்பலியும், திருமுழுக்கும் நடைபெற்று வந்தன.அருட்தந்தை ஜோசப் மடத்தில் அவர்களுக்குத் துணையாக 1968 முதல் அருட்தந்தை சிறியக் கூட்டுமேல் அவர்கள் செயல்பட்டார்கள். அவரைத் தொடர்ந்து அருட்தந்தை தோமஸ் நெல்லிக்குந்நத் அடிகளார் சிறிதுகாலம் மறைபரப்புப் பணியை முக்கூட்டுக்கல்லில் சீரும் சிறப்புமாகச் செய்தார்கள்.

06.06.1965 -ல் திரு இருதய அருட்சகோதரிகள் முக்கூட்டுக்கல் பங்கில் சேவை செய்வதற்காக வருகை தந்தார்கள். Sr. செசரியா, Sr. வெனர்டு, Sr. ரீத்தா என்பவர்கள் இங்கு தங்குவதற்கு தேவையான எல்லா வசதிகளையும் மடத்தில் அவர்கள் செய்து கொடுத்தார்கள். வீடு சந்திப்பு, நோயாளிகள் சந்திப்பு மறைக்கல்வி போன்ற பணிகளைச் செய்து வந்தார்கள். அதன் பயனாக ஏராளமானோர் சபையில் உறுப்பினர்கள்



ஆனார்கள். முக்கூட்டுக்கல் மக்களை கல்வியில் வளர்த்த வேண்டும் என்ற சிந்தனையில் 1969 ஜூன் 1-ம் தேதி முக்கூட்டுக்கல் பங்கில் ஒரு ஆரம்பப்பள்ளியை அருட்தந்தை ஜோசப் அடிகளார் தொடங்கி வைத்தார்கள். ஜூலை 5-ம் தியதி Sr. சோபி றோஸ், Sr. லிசி ஜோஸ் Sr. ஜெயின் மரியா, Sr. கொன்சீலியா ஆகியோர்கள் ஆசிரியர்களாக பணியை தொடங்கினார்கள். பள்ளி வளர்ச்சிக்காக அருட்தந்தை சிறியக் கூட்டுமேல் அவர்களும் ஜோசப் அடிகளாருக்கு பேருதவி செய்தார்கள்.

1972 ஜனவரி 26-ம் தேதி பேராயர் ஆன்றணி படியறா ஆண்டகை அவர்கள் ஒரு கன்னியர் மடத்தினை முக்கூட்டுக்கல்லில் அர்ச்சித்து திறந்து வைத்தார்கள். 10 ஆண்டுகள் சேவை செய்த ஜோசப் அடிகளார் இங்கிருந்து 17-5-1973 அன்று மாற்றலாகிச் சென்றார். அவருக்குப் பின் அருட்தந்தை மாத்யூ வைலங்கல் அடிகளார் பொறுப்பேற்றார். அவரும் சிலகாலம் பங்கு மக்களுக்காகவும், பள்ளிக்கூட வளர்ச்சிக்காகவும் பாடுபட்டு 1974-ல் மாற்றலாகிச் சென்று விட்டார். அவரைத் தொடர்ந்து அருட்தந்தை ஜேக்கப் காடாத்துக்குளம் அவர்கள் 1975-ல் மாற்றலாக அருட்தந்தை குரியாளச்சேரி பதவியேற்று, தம் அரும்பணிகளை சீரும் சிறப்புமாகச் செய்தார்.

1976 ஜனவரி 5-ம் தியதி பேராயர் ஆன்றணி படியற நமது பங்கு விஷயங்களைப் பற்றி ஆய்வு நடத்தி நல்ல முறையில் முக்கூட்டுக்கல் பங்கும், பள்ளிக்கூடமும் செயல்படுவதாக வாழ்த்தினார்.

பின்பு 1976 - இல் அருட்தந்தை தோமஸ் முட்டத்துக்குந்நேல் அவர்கள் பொறுப்பேற்று சுமார் 12 வருட காலம் சீரும் சிறப்புமாக மறைபரப்புப் பணியைச் செய்தார்கள். அவரைத் தொடர்ந்து 1981 பெப்ரவரி 28 முதல் அருட்தந்தை பிலிப் வைக்கத்துக்காரரும் தொடர்ந்து அருட்தந்தை மாத்யூ சூரவடியும், அவை தொடர்ந்து 1983 மேய் 4-ம் தியதி புதிய தேவாலயம் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அருட்தந்தை குரியன் களப்புரா அவர்கள் சிறிது காலம் சேவை செய்தார்கள்.

1985 ஜனவரி 18-ம் தியதி அருட்தந்தை ஜோண் தடத்தில் பதவியேற்று தேவாலயத்தை கட்ட ஆரம்பித்தார். 1985 ஜூன் 23-ம் தியதி தேவாலயம் கட்டி முடித்து அர்ச்சிக்கப்பட்டது. அவரைத் தொடர்ந்து அருட்தந்தை அகஸ்டின் பாறைக்காகவும், அருட்தந்தை

மேத்யூ குழிஞ்ஞாலில் அவர்களும் தம் பணியை ஆரம்பித்தார்கள். 1983-ல் பங்கலில் ஒரு மழலையர் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

15-2-1989-ல் அருட்தந்தை குரியன் புத்தன்புரா அவர்கள் தம் பணியை ஆரம்பித்து பல வருடங்கள் பங்கு வளர்ச்சிக்காகவும், பள்ளிக்கூட வளர்ச்சிக்காகவும் பாடுபட்டார்கள்.தொடர்ந்து அருட்தந்தை தெக்கேக் கூற்று, அருட்தந்தை வர்க்கீஸ் படிஞ்ஞாறேல், அருட்தந்தை ஜோசப் தண்ணிப்பாறை, அருட்தந்தை தெக்கேல், அருட்தந்தை ஜோசப் சந்தோஷ், அருட்தந்தை ஜோசப் அருவியில் ஆகியோர்கள் பங்கு வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்கள்.

தற்போது அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்திர பொறுப்பேற்று நமது பங்கின் 50-ம் ஆண்டு ஜூபிலியை சிறப்புற நடத்த அரும்பாடுபட்டு வருகிறார். தக்கலை மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக பணிப் பொறுப்பேற்றிருக்கும் ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்களின் வழிகாட்டுதலோடு அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்திர தலைமையில் சீரும் சிறப்புமாக 50-ம் ஆண்டு பொன்விழா நடைபெற அரும்பணிகள் நடைபெற்று வருகின்றன. பொன்விழா நினைவாக நமது ஆலயத்தின் மதுபகாவின் பணிகள் பங்குத் தந்தையின் வழிகாட்டுதலோடு வேகமாக நடைபெற்று வருகிறது.

**திரு. சீகாமணி** ஆசிரியர்

*முக்கூட்டுக்கல்*

## காரோடு குருசுமலை சிலுவைப் பாதை

மஞ்சாலுமூடு மறைமாவட்டம் சார்பில் ஆண்டுதோறும் காரோட்டில் அமைந்துள்ள குன்னம்பாறை குருசுமலையில் பெரிய வெள்ளியன்று சிலுவைப் பாதை நடத்தப்படுகிறது. இவ்வாண்டு ஏப்ரல் 3-ம் தேதி பிற்பகல் 2 மணிக்கு காரோடு தேவசகாயம் நல்வாழ்வு இல்லத்திலிருந்து சிலுவைப்பாதை தக்கலை மறைமாவட்ட இளைஞர் இயக்குனர் தந்தை அருள்திரு. பெலிக்ஸ் அவர்கள் தலைமையில் ஆரம்பித்து மாலை 5.30-க்கு குன்னம்பாறை குருசுமலையில் முடிவடைந்தது. சிலுவைப் பாதை பேரணியில் அருள்தந்தையர்கள் காரோடு பங்குதந்தை அருள்திரு தோமஸ் தக்கலை, மாறப்பாடி பங்குதந்தை அருள்திரு ஜோமோன், அருள்சகோதரிகள் மற்றும் மறைமாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பங்குகளிலிருந்தும் சுமார் அறுநூற்றுக்கும் மேற்பட்ட இறைமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்து இறை ஆசீர் பெற்றுச் சென்றனர்.



# இதரச் செய்திகள்

## சிறைக்கைதிகளின் பாதங்களை கழுவினார் திருத்தந்தை



புனித வியாழனன்று மாலை, இயேசுவின் இறுதி இரவு உணவு திருப்பலியை உரோம் நகரிலுள்ள ரெபிபியா சிறைச்சாலையில் நிறைவேற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். இத்திருப்பலியின் போது, இயேசு தன் சீடர்களின் பாதங்களைக் கழுவிய நிகழ்வை நினைவு கூரும் விதமாக, அங்கிருந்த 12 சிறைக்கைதிகளின் பாதங்களைக் கழுவித் துடைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். இதில் ஆறு பெண் கைதிகளும் அடங்குவர். ஒரு பெண்கைதி தன் குழந்தையையும் தூக்கி வந்திருந்தார். அக்குழந்தையின் கால்களையும் கழுவினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பெரிய வியாழனின் பாதம் கழுவும் சடங்கின்போது, திருத்தந்தை தங்கள் பாதங்களைக் கழிவியபோது பல கைதிகள் கண்ணீர்விட்டு அழுதனர்.

## இந்தியாவின் **Bagdogra** மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர்



இந்தியாவின் Bagdogra மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அருள்பணி Vincent Aind அவர்களை ஏப்ரல் 7 செவ்வாயன்று அறிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். கல்கத்தாவின் Morning Star குருத்துவக் கல்லூரியின் தத்துவ இயல் துறைத் தலைவராக பணியாற்றிவந்த அருள்பணி Vincent Aind அவர்கள், உரோம் நகர் கிரகோரியன் பாப்பிறைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். மேற்குவங்கத்தின் Kalchini என்னுமிடத்தில் 1955ம் ஆண்டு பிறந்த இவர், 1984ம் ஆண்டு Jalpaiguri மறைமாவட்டத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

Bagdogra மறைமாவட்ட ஆயர் Thomas D'Souza அவர்கள், கல்கத்தா பேராயராக 2011ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் தேதி மாற்றப்பட்டதிலிருந்து, ஆயரின்றி இருந்த இம்மறைமாவட்டத்திற்கு தற்போது அருள்பணி Vincent Aind அவர்களை புதிய ஆயராக நியமித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## சீரோ மலங்கரை புதிய மறைமாவட்டம்

டில்லிக்கு அருகே உள்ள குர்காவோன் (Gurgaon) நகரில், சீரோ மலங்கரை புதிய மறைமாவட்டம் ஒன்றை, புனித John Chrysostom பெயரால் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மார்ச் 26 வியாழனன்று உருவாக்கியுள்ளார். இந்தியாவுக்கு வெளியே வாழும் சீரோ மலங்கரா மக்களின் திருத்தூது மேய்ப்பராகப் பணியாற்றி வந்த ஆயர் Jacob Mar Barnabas Aerath அவர்களை, இந்தப் புதிய மறைமாவட்டத்தின் முதல் ஆயராக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நியமித்துள்ளார்.



1960ம் ஆண்டு கேரளாவின் திருவல்லாவில் பிறந்த Barnabas Aerath அவர்கள், 1986ம் ஆண்டு அருள் பணியாளராகவும், 2007ம் ஆண்டு ஆயராகவும் திருநிலைப்படுத்தப்பட்டார். நன்னெறி இறையியலில் முனைவர் பட்டம் பெற்றவர் இவர். மேலும், மகாராஷ்ரா மாநிலம், Khadki நகரில், புனித Ephrem பெயரில், அப்போஸ்தலிக்க நிர்வாக வட்டத்தை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வியாழனன்று உருவாக்கி, அதன் முதல் அப்போஸ்தலிக்க நிர்வாகியாக, ஆயர் Thomas Mar Anthonios Valiyavilayil அவர்களை நியமித்துள்ளார்.

## அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு பயிற்சியாளர் மாநாடு

திருஅவையில் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு வாழ்வோருக்குப் பயிற்சி அளிப்பவருக்கென இம்மாதம் 8ம் தேதி முதல் 11ம் தேதி வரை உரோம் நகரில் அனைத்துலக மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. திருஅவையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் அர்ப்பணிக்கப் பட்ட வாழ்வு ஆண்டு நிகழ்வுகளில் ஒன்றாக, அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு வாழ்வோர் திருப்பேராயம் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.




உரோம் நகர் Ergif பயணியர் மாளிகையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் ஏறக்குறைய 1,200 பயிற்சியாளர்கள் கலந்துகொள்வார்கள். மேலும், ஐம்பதுக்கு மேற்பட்ட வல்லுனர்கள் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு பற்றிய சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி



**BISHOP'S ENGAGEMENTS**

**April 2015**

| DAY DATE | TIME | EVENTS |
|---|---|---|
| Wednesday 01 | 5:30pm | Mankarai: Diaconate Ordination |
| Thursday 02 | 6.00pm | Thadikkarakkonam: Pesaha Thursday |
| Friday 03 | 8.00am | Thettiyode (Passion reading) |
| | 3.00pm | Annikarai (Way of the Cross) |
| Saturday 04 | | Bishop's House: Great Saturday |
| Sunday 05 | 3.00am | Bengiri: Easter Vigil Mass |
| | 12 pm | Lunch with German Students |
| Monday 06 | 9.15am | Pacha-Chekkidikadu: Dn. Shoji's Ordination |
| | 2.00pm | Kulipura: Dn. Ajeesh's Ordination |
| Tuesday 07 | 9.15am | Pooyamkuty: Dn. Jose's Ordination |
| Wednesday 08 | 9.15am | Mankulam: Dn. Printo's Ordination |
| Thursday 09 | 9.15am | Mavady: Dn. Vinod's Ordination |
| | 2.00pm | Manjapetty: Dn. Abin's Ordination |
| | 7.00pm | Katapana: Thuckalay friends meeting |
| Friday 10 | | Idukki visit;, Night stay at Kanjirapally Bishop's House |
| Saturday 11 | 9.15am | Kanayankavayal: Dn. Sumesh's Ordination |
| Sunday 12 | 12noon | Thekkekara: Eucharistic Procession |
| | 7.00pm | Changanacherry: Thuckalay friends meeting |
| Monday 13 | 9.30am | Priests Cnference |
| | 5.00pm | Pastoral Council Agenda Committee meeting |
| Tuesday 14 | | Thellagam: CMC Sisters' Golden Jubilee |
| Wednesday 15 | 6.00am | CMC: Final Profession at Aluva |
| | 11 am | Pala: Marriage Qurbana of Thuckalay friends>> |
| | 10 pm | Velankanny |
| Thursday 16, Friday 17 | | Velankanni |
| Saturday 18 | 9.30am | FCC Golden Jubilee |
| | 6.00pm | Mass in the Convent |
| Sunday 19 | | Cheenivilai: Pastoral Visit |
| Monday 20 | | Thagazhi, Edathua: Silver jubilee of Profession |
| | 6.00pm | Mass in the Convent |
| Tuesday 21 | 2.30pm | Interdepartmental Meet |
| | 6.00pm | Mass at CMC Thuckalay |
| Wednesday 22 | 9.30am | Curia Meeting |
| | 6.00pm | Mass at FCC Plankalai |
| Thursday 23 | 11.00am | Sr. Magdalin's SABS Golden Jubilee Qurbana |
| Friday 24 | 6.00pm | Mukkoottukal: Parish Golden Jubilee>> Thirssur |
| Saturday 25 | 11 am | Thrissur: Marriage Qurbana >> Thuckalay |
| Sunday 26 | 8.00 am | Nithiravilai: Pastoral Visit |
| Monday 27 | 10.30am | Nagercoil: Jubilee of St. Alphonsa Convent |
| Tuesday 28 | 6.00pm | Bishop's House>> Chennai |
| Wednesday 29 | 10.00am | Chennai: SMSM Sisters' Silver Jubilee |
| Thursday 30 | 5.30 pm | Chennai >>Kottayam |
| Friday May 1 | 8.00am | Athirampuzha: SABS Mission animation |
| | 3.00pm | Muttuchera: Kudumbayogam Qubana |

Fr. K. J. Antony SDB
*Diocese Secretary*

இறையருள் செய்திகள் மற்றும் விமர்சனங்களுக்கு
iraiarultkly@gmail.com